# நாடாளுமன்ற மக்களவை பொதுத் தேர்தல் - 2014

## கரூர் நாடாளுமன்றத் தொகுதி

**அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர்**
**மாண்புமிகு தமிழ் நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்**
**இன்று (13.4.2014), கரூர் நாடாளுமன்றத் தொகுதிக்கு உட்பட்ட**
**'கரூர் நகராட்சி மைதானம், ராயனூர், கரூர்' என்ற இடத்தில் நடைபெற்ற**
**தேர்தல் பிரச்சாரப் பொதுக்கூட்டத்தில் பங்கேற்று கழக வேட்பாளர்களை ஆதரித்து**
**ஆற்றிய எழுச்சிமிகு தேர்தல் பிரச்சார பொதுக்கூட்ட உரை**

"கரூர் நாடாளுமன்றத் தொகுதியைச் சேர்ந்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் மாவட்டக் கழகச் செயலாளர்களே, தேர்தல் பணிக்குழு பொறுப்பாளர்களே, கழக நிர்வாகிகளே, தலைமைக் கழக நிர்வாகிகளே, திண்டுக்கல் மாவட்டக் கழகச் செயலாளரும், அமைச்சருமான அன்புச் சகோதரர் திரு. நத்தம் இரா. விசுவநாதன் அவர்களே, கரூர் மாவட்டக் கழகச் செயலாளரும், அமைச்சருமான அன்புச் சகோதரர் திரு. செந்தில்பாலாஜி அவர்களே, புதுக்கோட்டை மாவட்டக் கழகச் செயலாளரும், அமைச்சருமான அன்புச் சகோதரர் டாக்டர் விஜயபாஸ்கர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்களே, உள்ளாட்சி மற்றும் கூட்டுறவு அமைப்புகளின் பிரதிநிதிகளே, தமிழ் நாடு கொங்கு இளைஞர் பேரவையின் நிறுவன அமைப்பாளரும், பரமத்தி வேலூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான திரு. தனியரசு அவர்களே; தமிழக மக்கள் முன்னேற்றக் கழகத்தின், நிறுவனத் தலைவர் திரு. ஜான் பாண்டியன் அவர்களே; கொங்குநாடு முன்னேற்றக் கழகத் தலைவர், திரு. பெஸ்ட் ராமசாமி அவர்களே; மாவீரன் தீரன் சின்னமலை பேரவையின், தலைவர் திரு. முருகேசன் அவர்களே, இந்திய குடியரசு கட்சி, அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி, அகில இந்திய பார்வர்டு பிளாக், அகில இந்திய மூவேந்தர் முன்னணிக் கழகம், மூவேந்தர் முன்னேற்றக் கழகம், தமிழக வாழ்வுரிமைக் கட்சி, புரட்சி பாரதம், இந்திய தேசிய லீக், இந்தியன் யூனியன் காயிதே மில்லத் லீக், அகில இந்திய தேசிய லீக், இந்திய தேசிய முஸ்லிம் லீக், தமிழ் மாநில முஸ்லீம் லீக், இந்திய தவ்ஹீத் ஜமாஅத், கிறிஸ்தவ முன்னேற்றக் கழகம் உள்ளிட்ட தோழமைக் கட்சிகளின் தலைவர்களே, தொண்டர்களே, பொதுமக்களே, வணக்கத்திற்குரிய பெரியோர்களே, என்னை வாழ வைக்கும் தெய்வங்களாகிய தாய்மார்களே, இதய தெய்வம் புரட்சித் தலைவர் MGR–ன் ரத்தத்தின் ரத்தமான என் உயிரினும் மேலான எனதருமைக் கழக உடன்பிறப்புகளே, எனதருமை வாக்காளப் பெருமக்களே, உங்கள் அனைவருக்கும் எனது அன்பு கலந்த வணக்கத்தை முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன்.

நடைபெற இருக்கின்ற மக்களவைத் தேர்தல் வெறும் ஆட்சி மாற்றத்திற்காக நடைபெறுகின்ற சாதாரணத் தேர்தல் அல்ல. இந்திய மக்களுக்கு விடுதலையைப் பெற்றுத் தரும் தேர்தல். அண்டை நாடுகளின் அச்சுறுத்தல்களில் இருந்து இந்தியாவை காக்கின்ற தேர்தல், பொருளாதார சீரழிவிலிருந்து இந்தியாவை மீட்கும் தேர்தல், ஊழல் சாம்ராஜ்யத்தில் இருந்து இந்தியாவை விடுவிக்கின்ற தேர்தல், உங்களின் துன்பங்களை போக்குகின்ற தேர்தல், உங்களை துயரங்களிலில் இருந்து விடுவிக்கின்ற தேர்தல். காங்கிரஸ் தலைமையிலான மத்திய கூட்டணி ஆட்சியில் என்னென்ன பிரச்சனைகளுக்கு நீங்கள் ஆளாகி இருக்கிறீர்கள் என்பதை சொல்லி மாளாது. விலைவாசி உயர்வு, பணவீக்கம், மாதா மாதம் பெட்ரோல், டீசல் விலை உயர்வு, வேலை வாய்ப்பின்மை, தொழில் வளர்ச்சியின்மை, வேளாண் உற்பத்தியில் மந்த நிலை என, மத்திய காங்கிரஸ் அரசால் ஏற்படுத்தப்பட்ட பிரச்சனைகளை அடுக்கிக் கொண்டே போகலாம். இது போன்ற மோசமான அரசை நாம் பார்த்ததே இல்லை என்று சொல்லும் அளவுக்கு மத்திய காங்கிரஸ் கூட்டணி அரசு ஆட்சி நடத்தியது.

இப்படி எல்லா விதத்திலும் சாமானிய மக்களுக்கு எதிரான மத்திய காங்கிரஸ் கூட்டணி ஆட்சியில் சில மாதங்களுக்கு முன்பு வரை அங்கம் வகித்து ஒட்டி உறவாடிய கட்சி தி.மு.க. என்பதை மறந்துவிடாதீர்கள். தமிழ் நாட்டிற்கே தலைகுனிவை ஏற்படுத்தும்

வகையில், 2 லட்சம் கோடி ரூபாய் அளவுக்கு 2ஜி ஸ்பெக்ட்ரம் இமாலய ஊழலை முன்னின்று நடத்திய கட்சி தி.மு.க. இப்படி காங்கிரசும், தி.மு.க–வும் சேர்ந்து சாமானிய, ஏழை, எளிய, நடுத்தர மக்களுக்கு எதிராக செயல்பட்டதன் காரணமாக இந்தியாவின் பொருளாதாரமே ஸ்தம்பித்துவிட்டது. இப்படிப்பட்ட கொடுங்கோல் அரசிடமிருந்து, இந்திய நாட்டை காப்பாற்றுவதற்கான தருணம் வந்துவிட்டது. தமிழ் நாட்டிற்கு தேவையானவற்றை மத்திய அரசிடம் கேட்டுப் பெறுகின்ற காலம் கனிந்துவிட்டது. இப்போது உங்களுக்கு கிடைத்திருக்கின்ற வாய்ப்பின் மூலம் உங்கள் வாக்குரிமையை நீங்கள் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு ஆதரவாக செலுத்த வேண்டும் என்று சொல்லுவதற்காகவே இன்று இங்கே உங்களை நேரில் சந்திக்க வந்திருக்கிறேன்.

2011–ஆம் ஆண்டு நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலில், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை எந்த அளவிற்கு வெற்றி பெற வைத்தீர்களோ, அதைவிட மகத்தான வெற்றியை இந்த நாடாளுமன்ற தேர்தலில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு நீங்கள் வழங்க வேண்டும் என்ற வேண்டுகோளினை உங்கள் முன் வைப்பதற்காகவே இன்று இங்கே நான் வந்திருக்கிறேன். எனது வேண்டுகோளினை நீங்கள் நிச்சயம் நிறைவேற்றுவீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு முழுமையாக உண்டு. செய்வீர்களா ? நீங்கள் செய்வீர்களா ? (செய்வோம் என பலத்த கரகோஷம்)

கடந்த 34 மாத கால ஆட்சியில் மத்திய அரசின் மாற்றாந்தாய் மனப்பான்மையையும் மீறி, திமுக–வின் சதித் திட்டங்களையும் மீறி தமிழக மக்களுக்கு என்னென்ன நலத் திட்டங்களை, வளர்ச்சித் திட்டங்களை, தொலைநோக்குத் திட்டங்களை என்னால் தர முடியுமோ அத்தனையும் அளித்திருக்கிறேன்; அளித்துக் கொண்டும் வருகிறேன்.

விலையில்லா அரிசி வழங்கும் திட்டம், திருமண உதவித் தொகையுடன் கூடிய தாலிக்கு தங்கம் வழங்கும் திட்டம், விலையில்லா மிக்ஸி கிரைண்டர் மற்றும் மின்விசிறி வழங்கும் திட்டம், ஏழை கிராமப்புற மக்களுக்கு கறவைப் பசுக்கள் மற்றும் வெள்ளாடுகள் வழங்கும் திட்டம், சமூகப் பாதுகாப்புத் திட்டங்களின் கீழ் வழங்கப்படும் ஓய்வூதியம் 1,000 ரூபாயாக உயர்வு, மேல்நிலை வகுப்பு பயிலும் மாணவ, மாணவியருக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் திட்டம், விலையில்லா மடிக் கணினிகள் வழங்கும் திட்டம், கட்டணமில்லா கல்வி, மாணவ, மாணவியருக்கு கட்டணமில்லா பேருந்து வசதி, முதலமைச்சரின் விரிவாக்கப்பட்ட மருத்துவக் காப்பீட்டு திட்டம், முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம், முதலமைச்சரின் சூரிய மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடுகள் திட்டம், தானே புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஒரு லட்சம் காங்கிரீட் வீடுகள் கட்டித் தரும் திட்டம், நெசவாளர்களுக்கென 10,000 வீடுகள் கட்டித் தரும் திட்டம் என எண்ணற்ற திட்டங்கள் எனது அரசால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

கரூர் நாடாளுமன்ற தொகுதிக்கு உட்பட்ட பகுதிகளில் பல்வேறு வசதிகளை கடந்த 34 மாதங்களில் நாங்கள் நிறைவேற்றி கொடுத்து இருக்கிறோம்.

கரூர் மாவட்டத்தில் 15 கோடியே 95 லட்சத்து 30 ஆயிரம் ரூபாய் மதிப்பில் மூன்று பாலங்கள் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது. போக்குவரத்து நெரிசலை குறைக்கும் வகையில் கரூர் மாவட்டம் பசுபதி பாளையம் அருகில் அமராவதி ஆற்றின் குறுக்கே, கரூர்–வாங்கல் சாலையையும், நாகப்பட்டினம்–கூடலூர்–மைசூர் சாலையையும் இணைக்கும் தரை வழிப் பாலத்தை 12 கோடியே 50 லட்சம் ரூபாய் செலவில் உயர்மட்ட பாலமாக கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

கரூர் சுகாதார மாவட்டம், தாந்தோணி வட்டாரத்தில் உள்ள வடக்கு பாளையம் மற்றும் கே.பரமத்தி வட்டாரத்தில் உள்ள தும்பிவாடி ஆகிய இடங்களில் புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. கரூர் மாவட்ட மருத்துவமனையை, மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு இணையாக தரம் உயர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது.

தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம், கரூர் மாவட்டம், காகிதபுரத்தில் 130 கோடி ரூபாய் முதலீட்டில் புதிய சிமெண்ட் உற்பத்தி தொழிற்சாலையை துவங்கியுள்ளது. இதனை நான் சென்ற ஆண்டு துவக்கி வைத்தேன். இதன் மூலம் புதிதாக வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டு உள்ளன.

இது தவிர, 164 கோடி ரூபாய் முதலீட்டில் நிறுவப்பட்டுள்ள காகித கூழ் தயாரிக்கும் பிரிவு, 167 கோடி ரூபாய் முதலீட்டில் சுய தேவைக்கான மின் உற்பத்திப் பிரிவு, 89 லட்சம் ரூபாய் செலவில் நான்கு கிராமங்களுக்கு காகித ஆலையிலிருந்து குடிநீர் விநியோகம் செய்யும் திட்டம் ஆகியவற்றையும் நான் துவக்கி வைத்துள்ளேன். இது மட்டுமல்லாமல், 4 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்பட்டுள்ள TNPL தொழிற் பயிற்சி நிலையம் மற்றும் 25 லட்சத்து 6 ஆயிரம் ரூபாய் செலவில் வேலாயுத பாளையம் அரசு மருத்துவமனையில் கட்டப்பட்டுள்ள அவசர சிகிச்சை அறை மற்றும் புற நோயாளிகள் பிரிவு கட்டடம் ஆகியவற்றையும் நான் திறந்து வைத்தேன்.

கரூர் மாவட்டத்தில் 1 கோடியே 96 லட்சம் ரூபாய் செலவில் 400 மீட்டர் ஓடு தளம், கூடைப்பந்து, கையுந்துப் பந்து, கால்பந்து, கபடி, கோ–கோ ஆடுகளங்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய மாவட்ட விளையாட்டு வளாகம் என்னால் திறந்து வைக்கப்பட்டுள்ளது. பொதுமக்களின் நலனைக் கருத்தில் கொண்டு, மணப்பாறை வட்டத்தினை பிரித்து மருங்காபுரியில் புதிய வட்டமும், கரூர் வட்டத்தைப் பிரித்து மண் மங்கலத்தில் ஒரு புதிய வட்டமும் உருவாக்கப்பட்டுள்ளன. புதுக்கோட்டை வருவாய்க் கோட்டத்தை இரண்டாகப் பிரித்து இலுப்பூர் வருவாய்க் கோட்டம் புதிதாக உருவாக்கப்பட்டு உள்ளது.

இந்தத் தொகுதியில் உள்ள பரமத்தி, அரவக்குறிச்சி, கரூர் மற்றும் தாந்தோன்றிமலை ஒன்றியங்களில் உள்ள அமராவதி பழைய பாசன வாய்க்கால்கள் 10 கோடியே 70 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சீரமைக்கப்பட்டு உள்ளன. தாந்தோன்றி மலை ஒன்றியத்தில் உள்ள செட்டிப் பாளையம் அணைக்கட்டு சீரமைக்கும் பணி 2 கோடியே 18 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், பரமத்தி ஒன்றியத்தில் உள்ள நஞ்சைத் தலையூர் அணைக்கட்டு புனரமைக்கும் பணி 1 கோடியே 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும் நடைபெற்று வருகின்றன. பரமத்தி ஒன்றியம், ராஜபுரம் கிராமத்தில் 2 கோடியே 86 லட்சம் ரூபாய் மதிப்பில் தடுப்பணை கட்டும் பணியும், சின்ன தாராபுரம் கிராமத்தில் 1 கோடியே 32 லட்சம் ரூபாய் மதிப்பில் சுண்டக்காம் பாளையம் அணைக்கட்டு புனரமைக்கும் பணியும் நடைபெற்று வருகின்றன. சின்னதாராபுரம் அணைக்கட்டு 2 கோடியே 57 லட்சம் ரூபாய் செலவிலும், நஞ்சைக் காளக் குறிச்சி அணைக்கட்டு 1 கோடியே 25 லட்சம் ரூபாய் செலவிலும், பள்ளபாளையம் அணைக்கட்டு 2 கோடியே 57 லட்சம் ரூபாய் செலவிலும் மறு சீரமைக்கப்பட்டுள்ளன. வேடசந்தூர் மற்றும் அரவக்குறிச்சி ஒன்றியங்களில் குடகனாறு அணை வலது பிரதான கால்வாயினை சீரமைக்கும் பணி 81 லட்சம் ரூபாய் செலவில் நடைபெற்று வருகிறது. அன்னவாசல் ஒன்றியத்தில் 44 ஏரிகள், விராலிமலை ஒன்றியத்தில் 3 ஏரிகள், மருங்காபுரி ஒன்றியத்தில் 6 ஏரிகள் என மொத்தம் 53 ஏரிகள் 2 கோடியே 89 லட்சம் ரூபாய் செலவில் புனரமைக்கப்பட்டு வருகின்றன. வேடசந்தூர் ஒன்றியம் கூம்பூர் கிராமம் அருகில் குடகனாற்றின் குறுக்கே 85 லட்சம் ரூபாய் செலவிலும், அரவக்குறிச்சி ஒன்றியம் சேந்தமங்கலம் கிராமத்தில் நங்காஞ்சி ஆற்றின் குறுக்கே 48 லட்சம் ரூபாய் செலவிலும் தடுப்பணைகள் கட்டப்பட்டு உள்ளன.

கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் தாலுகா, மாயனூர் கிராமத்தில் காவேரி ஆற்றின் குறுக்கே பழைய கட்டளை படுகணையின் கீழ்புறம் 258 மீட்டர் தொலைவில் 254 கோடியே 40 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய கதவணை கட்டும் பணி நடைபெற்று முடிவுறும் தருவாயில் உள்ளது.

கரூர் தொகுதிக்குட்பட்ட புஞ்சை புகளூர் பேரூராட்சி மக்களுக்கான குடிநீர்த் திட்டம் 2 கோடி ரூபாய் செலவில் நிறைவேற்றப்பட்டுள்ளது. இதன் மூலம் 20,000 மக்கள் பயன் அடைந்து வருகின்றனர். கரூர் ஒன்றியத்திற்கு உட்பட்ட மண்மங்கலம் மற்றும் 71 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் 2 கோடியே 38 லட்சம் ரூபாய் செலவில் நிறைவேற்றப்பட்டு என்னால் துவக்கி வைக்கப்பட்டது. இதன் மூலம் 24,000 மக்கள் பயன் அடைந்து வருகின்றனர். இந்த தொகுதிக்குட்பட்ட விராலிமலை மற்றும் அன்னவாசல் ஒன்றியங்களுக்கு உட்பட்ட 899 குடியிருப்புகள் பயன் பெறும் வகையில், காவேரி குடிநீரை ஆதாரமாகக் கொண்டு ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

ஒரு லட்சத்து இரண்டாயிரம் மக்களுக்கு பயன் அளிக்கக்கூடிய கரூர் குடிநீர்த் திட்டப் பணிகள் 24 கோடியே 67 லட்சம் ரூபாய் செலவிலும், ஒரு லட்சத்து 45 ஆயிரம் மக்கள் பயன்பெறும் இனாம் கரூர் குடிநீர்த் திட்டப் பணிகள் 18 கோடியே 57 லட்சம் ரூபாய் செலவிலும், ஒரு லட்சத்து ஓராயிரம் மக்களுக்கு பயனளிக்கும் தான்தோன்றி குடிநீர்த் திட்டப் பணிகள் 25 கோடியே 16 லட்சம் ரூபாய் செலவிலும் நடைபெற்று வருகின்றன. தான்தோன்றி ஒன்றியத்திற்கு உட்பட்ட பள்ளிப் பாளையத்தில் உள்ள 40 குடியிருப்புகள், ஆண்டான் கோயில் தெரு மற்றும் மேற்கு ஊராட்சிகளில் வசிக்கும் 24,000 மக்கள் பயன் அடையக் கூடிய கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணிகள் 6 கோடியே 42 லட்சம் ரூபாய் செலவில் நடைபெற்று வருகின்றன.

கரூர் மக்களவைத் தொகுதியின் வளர்ச்சிக்காக, நலனுக்காக, பல்வேறு பணிகளை நாங்கள் மேற்கொண்டு வருகிறோம்.

வாக்காளப் பெருமக்களே! தமிழ்நாட்டின் உயிர்நாடி பிரச்சனையாக விளங்குவது காவேரி நதிநீர்ப் பிரச்சனை. காங்கிரஸ் கட்சி தலைமையிலான மத்திய ஆட்சியாக இருந்தாலும், பாரதீய ஜனதா கட்சி தலைமையிலான மத்திய ஆட்சியாக இருந்தாலும், காவேரி பிரச்சனையைப் பொறுத்த வரையில் தமிழ்நாட்டிற்கு துரோகம் இழைப்பதையே வாடிக்கையாக கொண்டுள்ளனர். 1998–ஆம் ஆண்டு எனது தலைமையிலான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், பாரதீய ஜனதா கட்சியுடன் மக்களவைத் தேர்தலில் கூட்டணி அமைத்து, மத்திய கூட்டணி ஆட்சியிலும் பங்கு பெற்றது. அப்போது காவேரி நடுவர் மன்றத்தின் இறுதி ஆணை வரப் பெறவில்லை. இடைக்கால ஆணை தான் அமலில் இருந்தது. அந்த இடைக்கால ஆணையை செயல்படுத்த அதிகாரிகள் கொண்ட ஓர் அமைப்பை ஏற்படுத்த வேண்டும் என்றும், அந்த அமைப்பிற்கு காவேரி நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணையை செயல்படுத்துகின்ற அதிகாரம் மற்றும் கர்நாடகத்தில் உள்ள அணைகளை இயக்கும் அதிகாரம் ஆகியவை வழங்கப்பட வேண்டும் என்றும் நான் கோரிக்கை வைத்தேன். அதை செய்வதற்குப் பதிலாக அன்றைய பாரதப் பிரதமர் திரு. வாஜ்பாய், இந்திய பிரதமரை தலைவராகவும், சம்பந்தப்பட்ட நான்கு மாநில முதலமைச்சர்களை உறுப்பினர்களாகவும் கொண்ட காவேரி நதிநீர் ஆணையத்தை அமைத்தார். இதனை, அப்போதே நான் எதிர்த்தேன். இப்படிப்பட்ட ஓர் ஆணையத்தால் எந்தப் பயனும் இருக்காது என்று உணர்ந்ததால் தான் அதை நான் கடுமையாக எதிர்த்தேன். அதிகாரம் படைத்த அதிகாரிகள் குழுவை மத்திய பாரதீய ஜனதா கூட்டணி அரசு அமைக்க மறுத்ததால் தான், இனி அந்த அரசால் தமிழ்நாட்டிற்கு எந்த நீதியும் கிடைக்காது என்பதால் தான், BJP தலைமையிலான மத்திய அமைச்சரவையிலிருந்து அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் விலகிக் கொண்டதோடு, அந்த BJP கூட்டணி அரசுக்கு அளித்து வந்த ஆதரவையும் 1999–ஆம் ஆண்டு நான் திரும்பப் பெற்றேன்.

அப்போது, தமிழகத்தில் திரு. கருணாநிதி தலைமையிலான தி.மு.க. ஆட்சி நடைபெற்று வந்தது. அந்தத் தருணத்தில் பாரதீய ஜனதா கட்சி திரு. கருணாநிதியை அணுகி காவேரி நதிநீர் ஆணையம் அமைப்பதற்கான ஒப்புதலைப் பெற்றது. இதனைத் தொடர்ந்து பாரதீய ஜனதாவுடன் கூட்டணி அமைத்த தி.மு.க. மத்திய அமைச்சரவையிலும் அங்கம் வகித்தது. நான் தெரிவித்தது போலவே காவேரி நதிநீர் ஆணையத்தால் தமிழ்நாட்டிற்கு நீதி வழங்கப்படவே இல்லை. காவேரி நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணையை செயல்படுத்துவதற்கான எந்த நடவடிக்கையையும் காவேரி நதிநீர் ஆணையத்தால் மேற்கொள்ள இயலவில்லை. அந்த அமைப்பால் தமிழகத்திற்கு எந்த விதப் பயனும் ஏற்படவில்லை.

கர்நாடக மாநிலத்தில் காங்கிரஸ் கட்சிக்கும், பாரதீய ஜனதா கட்சிக்கும், ஆட்சி அமைக்கின்ற வாய்ப்பு சம அளவிலேயே உள்ளது. கர்நாடகாவில் காங்கிரஸ் கட்சியும், பாரதீய ஜனதா கட்சியும் மாறி மாறி ஆட்சி அமைக்கின்றன. ஆனால், தமிழ்நாட்டில் எந்தக் காலத்திலும் காங்கிரஸ் கட்சியாலும், பாரதீய ஜனதா கட்சியாலும் ஆட்சி அமைக்கவே முடியாது. தமிழ் நாட்டில் எந்தக் காலத்திலும் காங்கிரஸ் கட்சியால் ஆட்சி அமைக்க முடியாது. தமிழ் நாட்டில் எந்தக் காலத்திலும் BJP–யாலும் ஆட்சி அமைக்க முடியாது. எனவே தான், மத்தியிலே பாரதீய ஜனதா கட்சி தலைமையில் ஆட்சி அமைந்தாலும், காங்கிரஸ்

தலைமையில் ஆட்சி அமைந்தாலும் இரு கட்சிகளிடையே வேறு எந்தப் பிரச்சனைகளில் மாறுபாடு இருந்தாலும், வேறு எது எப்படி இருந்தாலும் காவேரி நதிநீர்ப் பிரச்சனையை பொறுத்தவரை BJP–யும், காங்கிரசும் ஒரே விதமான கொள்கையைத் தான் கடைபிடித்து வருகின்றன. தமிழ்நாட்டை, தமிழக மக்களை இரு கட்சிகளுமே வஞ்சித்து வருகின்றன.

அதை போலவே, கர்நாடக மாநிலத்தில் பாரதீய ஜனதா ஆட்சி இருந்தாலும், காங்கிரஸ் ஆட்சி இருந்தாலும், வேறு எதில் அவை மாறுபட்டு இருந்தாலும் தமிழ்நாட்டிற்கு ஒரு சொட்டு காவேரி நீர் கூட திறந்து விடக் கூடாது என்பதில் இரு கட்சிகளுமே உறுதியாக உள்ளன, தீவிரமாக செயல்படுகின்றன.

எனவே, காவேரி நதிநீர்ப் பிரச்சனையில் தமிழகத்தின் உரிமை நிலைநாட்டப்பட வேண்டும் என்றால், வாக்காளப் பெருமக்களாகிய நீங்கள், நடைபெறவுள்ள நாடாளுமன்ற மக்களவை தேர்தலில், காங்கிரஸ் கட்சிக்கும் வாக்களிக்கக் கூடாது. BJP–க்கும் வாக்களிக்கக் கூடாது. உங்களை அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்; வருகின்ற தேர்தலில் நீங்கள் காங்கிரஸ் கட்சிக்கும் வாக்களிக்கக் கூடாது, BJP–க்கும் வாக்களிக்கக் கூடாது.

காவேரி நதிநீர்ப் பிரச்சனையில் தொடர்ந்து தமிழகத்தை வஞ்சித்த காங்கிரஸ் கட்சியின் வேட்பாளர்களையும், பாரதீய ஜனதா கட்சியின் வேட்பாளர்களையும், இந்தத் தேர்தலில் அவர்கள் போட்டியிடுகின்ற அனைத்து தொகுதிகளிலும் நீங்கள் டெபாசிட் இழக்கச் செய்ய வேண்டும் என்று அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். செய்வீர்களா ? நீங்கள் செய்வீர்களா ? **(செய்வோம் என பலத்த கரகோஷம்)**

பாரதீய ஜனதா கட்சியின் தேர்தல் அறிக்கையில் காவேரி நதிநீர்ப் பிரச்சனை பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை. பாரதீய ஜனதா கட்சியின் தலைவர்கள் இதைப் பற்றி எதுவும் பேசுவதில்லை. BJP தலைவர்கள் தமிழகத்திற்குரிய காவேரி நீரை திறந்து விடுவதாக சொன்னாலே, கர்நாடக மாநிலத்தில், பாரதீய ஜனதா கட்சிக்கு வாக்குகள் கிடைக்காது. தமிழ்நாட்டிற்கு காவேரி நீரை திறந்து விடுகிறோம் என்று BJP சொன்னாலே கர்நாடகத்தில் இந்த மக்களவை தேர்தலில் BJP ஒரு தொகுதியில் கூட வெற்றி பெற முடியாது. எனவே, இதைப் பற்றி பாரதீய ஜனதா கட்சியினர் எதுவுமே பேச மாட்டார்கள். பாரதீய ஜனதா கட்சியுடன் கூட்டணி அமைத்துள்ள திரு. வைகோ டாக்டர் ராமதாஸ் மற்றும் இதர கட்சியினர் நமக்குரிய காவேரி நதிநீரை பெறுவதற்கு பாரதீய ஜனதா கட்சியிடம் இருந்து என்ன உத்தரவாதத்தினை பெற்றுள்ளனர்? அவர்கள் தமிழக மக்களுக்கு அதனை தெரிவிக்க வேண்டும். நமக்குரிய காவேரி தண்ணீரை அளிக்காமல், நம்மை ஏமாற்றியது தான் கடந்த கால வரலாறு. நமக்கு உரிய காவேரி நீரை திறந்து விடாமல் நம்மை வஞ்சித்தது தான் கடந்த கால அனுபவம். எனவே, பாரதீய ஜனதா கட்சியுடன் கூட்டணி வைத்துள்ள கட்சிகளால் நமது ஜீவாதாரப் பிரச்சனையான காவேரி நதிநீர்ப் பிரச்சனையில் எந்தத் தீர்வையும் காண முடியாது. அவர்களால், நமக்குரிய காவேரி தண்ணீரை பெறவே இயலாது. இது அவர்களுக்கும் தெரியும். அப்படியானால், BJP-உடன் கூட்டணி அமைத்துள்ள கட்சிகள் நமக்குரிய காவேரி நதிநீர் கிடைக்காவிட்டாலும் கவலை இல்லை என்று முடிவு செய்துவிட்டார்களா ? இதைவிட பெரிய துரோகம் வேறு என்ன இருக்க முடியும் ? இதைவிட பெரிய துரோகம் இருக்க முடியுமா ?

வாக்காளப் பெருமக்களே ! காவேரி நதிநீர்ப் பிரச்சனையில் தமிழகத்திற்கு தொடர்ந்து துரோகம் இழைத்து வரும் காங்கிரஸ், தி.மு.க., BJP மற்றும் அதன் கூட்டணிக் கட்சிகளை வரும் மக்களவை பொதுத் தேர்தலில் நீங்கள் படுதோல்வி அடையச் செய்ய வேண்டும் என்று உங்களையெல்லாம் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். செய்வீர்களா ? நீங்கள் செய்வீர்களா ? **(செய்வோம் என பலத்த கரகோஷம்)**

மத்திய காங்கிரஸ் கூட்டணியில் ஒன்பது ஆண்டு காலம் அங்கம் வகித்து விலைவாசி உயர்விற்கு காரணமாக இருந்த கட்சி தி.மு.க. இதே தி.மு.க. இன்று விலைவாசி உயர்வை காரணம் காட்டி ஓட்டு கேட்கின்றது. இதைவிட கேலிக்கூத்து வேறு ஏதாவது இருக்க முடியுமா ? மக்களை ஏமாளிகள் என்று நினைக்கிறதா தி.மு.க. ? விலைவாசி உயர்விற்கு முக்கிய காரணமாக விளங்குவது பெட்ரோல், டீசல் தொடர் விலை உயர்வு. இந்த விலை உயர்விற்கு திரு. கருணாநிதி ஆதரவு அளித்தாரா ? இல்லையா ?

பெட்ரோல் விலையை நிர்ணயம் செய்யும் அதிகாரத்தை 2010–ஆம் ஆண்டு மத்திய அரசு எண்ணெய் நிறுவனங்களுக்கே வழங்கியது. இது விலைவாசி உயர்விற்கு வழி வகுப்பதாகும். அப்போது, திமுக மத்திய அரசில் அங்கம் வகித்தது. இதை திரு. கருணாநிதி ஆதரித்தாரா ? இல்லையா ?

டீசல் விலையை நிர்ணயம் செய்யும் அதிகாரத்தை 2013–ஆம் ஆண்டு மத்திய அரசு எண்ணெய் நிறுவனங்களுக்கே வழங்கியது. இதன்படி டீசல் விலையை மாதா மாதம் எண்ணெய் நிறுவனங்கள் உயர்த்தின. இதுவும் விலைவாசி உயர்விற்கு வழி வகுப்பதாகும். இதை திரு. கருணாநிதி ஆதரித்தாரா ? இல்லையா ?

வேளாண் உற்பத்திக்கு தேவையான விதை, பூச்சிக்கொல்லி மருந்துகள் போன்ற இடு பொருட்களின் விலை உயர்விற்கு மத்திய அரசின் தவறான வேளாண் கொள்கை தான் காரணம். இதை திரு. கருணாநிதி ஆதரித்தாரா ? இல்லையா ?

மத்திய அரசின் உரக் கொள்கை காரணமாக உரங்களின் விலை தற்போது பல மடங்கு ஏறி உள்ளதே! இதற்கு காரணம் யார்? உரத் துறை அமைச்சராக இருந்தது யார்? திரு. கருணாநிதியின் மகன் தானே? விவசாயிகள் வயிற்றில் அடிக்கும் உரக் கொள்கை பற்றி திரு. கருணாநிதிக்கு கவலை கிடையாது. விவசாய இடு பொருட்களின் விலை உயர்ந்தால், உணவுப் பொருட்களின் விலை உயரும் என்று திரு. கருணாநிதிக்கு தெரியாதா ? அதனை ஏன் ஆதரித்தார் திரு. கருணாநிதி ?

இப்படி விலைவாசி உயர்விற்கு உறுதுணையாக இருந்துவிட்டு, இப்போது எனது தலைமையிலான அரசு மீது குற்றம் சாட்டுகிறார் திரு. கருணாநிதி. அதன் மூலம் மக்களை ஏமாற்றி தான் தப்பித்துக் கொள்ளலாம் என்று தப்புக் கணக்கு போடுகிறார் திரு. கருணாநிதி. இதனை நம்ப மக்கள் ஒன்றும் ஏமாளிகள் அல்ல.

தேசிய நெடுஞ்சாலைகளில் உள்ள சுங்கச் சாவடிகளில் கட்டணம் உயர்த்தப்பட்டதால் அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் மேலும் உயர்ந்துள்ளன. ஆந்திராவிலிருந்து சென்னைக்கு அரிசியை கொண்டு வருவதற்கு மட்டும் சுங்கச் சாவடி கட்டணமாக 3,000 ரூபாயை லாரி உரிமையாளர்கள் செலுத்துகின்றனர். தற்போது இந்தக் கட்டணம் மேலும் உயர்த்தப்பட்டுள்ளது. இந்தக் கட்டண உயர்வு காரணமாக அரிசி விலை உயருமா ? உயராதா ? இதற்கு யார் காரணம் ? மத்திய அரசு தானே ? இது திரு. கருணாநிதிக்கு தெரியாதா ? ஆனால், விலைவாசி உயர்விலிருந்து சாமானிய மக்களைக் காப்பாற்ற தேவையான நடவடிக்கைகளை எனது தலைமையிலான அரசு எடுத்து வருகிறது.

பொது விநியோகத் திட்டத்தின் கீழ் 20 கிலோ விலையில்லா அரிசி, வெளிச் சந்தையில் ஒரு கிலோ அரிசி 20 ரூபாய்க்கு விற்பனை, சிறப்பு பொது விநியோகத் திட்டத்தின் கீழ் ஒரு லிட்டர் பாமாயில் 25 ரூபாய்க்கும், ஒரு கிலோ துவரம் பருப்பு 30 ரூபாய்க்கும், உளுத்தம் பருப்பு 30 ரூபாய்க்கும் விற்பனை, குறைந்த விலையில் காய்கறிகள் கிடைத்திட பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகள், சமையல் எரிவாயு மீதான மதிப்புக் கூட்டு வரி முழுவதுமாக ரத்து என பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளேன். இதன் காரணமாக தமிழகத்தில் விலைவாசி உயர்வு ஓரளவு கட்டுப்படுத்தப்பட்டு உள்ளது.

கடந்த 17 ஆண்டுகளாக மத்தியில் அங்கம் வகித்த கட்சி தி.மு.க. கடந்த 10 ஆண்டு கால மத்திய காங்கிரஸ் கூட்டணி அரசில் ஒன்பது ஆண்டு காலம் அங்கம் வகித்த கட்சி தி.மு.க. 2009–ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கையில் கொடுக்கப்பட்ட வாக்குறுதிகள் எதையுமே தி.மு.க. நிறைவேற்றவில்லை.

எனவே தான், தி.மு.க–வால் கடந்த நாடாளுமன்ற தேர்தலில் தான் அளித்த வாக்குறுதிகள் எதை எதை நிறைவேற்றியது என்று சொல்லியும் வாக்கு கேட்க முடியவில்லை. தங்களது வேட்பாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டால் என்ன செய்வார்கள் என்று சொல்லியும் வாக்கு கேட்க முடியவில்லை. தாங்கள் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்ற இயலாததை மூடி மறைத்து, காங்கிரஸ் கட்சியுடன் சேர்ந்து தமிழகத்திற்கு இழைத்த துரோகத்தை முற்றிலும் மறைத்து, 2011–ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் அளித்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை என்று தி.மு.க–வினர் பொய்ப் பிரச்சாரம் செய்து வருகின்றனர்.

2011–ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கு தேர்தல் நடைபெற்ற போது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் வெளியிடப்பட்ட தேர்தல் அறிக்கையில் 177 வாக்குறுதிகள் தரப்பட்டு இருந்தன. இவற்றில் 150 வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மூன்று ஆண்டுகளில் இத்தனை வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட்டு இருப்பது சாதனை இல்லையா? ஆனால், மீதமுள்ள 27 வாக்குறுதிகளை சுட்டிக் காட்டி இவற்றை ஏன் நிறைவேற்றவில்லை என்று தி.மு.க–வினர் கேட்கின்றனர். இவற்றை நிறைவேற்ற இன்னும் இரண்டு ஆண்டு கால அவகாசம் உள்ளது என்பதை தி.மு.க–வினருக்கு நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்; நினைவுபடுத்த விரும்புகிறேன்.

2009–ஆம் ஆண்டு தி.மு.க. தேர்தல் அறிக்கையில் வேளாண் துறை தொடர்பாக ஆறு வாக்குறுதிகள் அளிக்கப்பட்டு இருந்தன. இதில் எதையுமே தி.மு.க. நிறைவேற்றவில்லை. பொருளாதார மந்த நிலை காரணமாக வேளாண் துறை பாதிப்புக்கு உள்ளாகாத வகையில் சிறப்பு திட்டங்களை செயல்படுத்த வேண்டும் என்றும், இவற்றை மாநில அரசுகளின் வழியாக நிறைவேற்றுவதில் தான் உயர் வளர்ச்சியை எதிர்காலத்தில் அடைய முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த வாக்குறுதியை நிறைவேற்றினாரா திரு. கருணாநிதி? இல்லையே!

வேளாண் உற்பத்தியைப் பெருக்கும் வகையில் விவசாயிகளுக்கு 2 விழுக்காடு வட்டியில் வங்கிக் கடன் வழங்கப்பட வேண்டும் என்று 2009–ஆம் ஆண்டு தி.மு.க. தேர்தல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டு இருந்ததே? இதற்காக நடவடிக்கை எடுத்தாரா திரு. கருணாநிதி? இல்லையே!

வேளாண் கடனை குறித்த காலத்தில் திருப்பிச் செலுத்தும் விவசாயிகளுக்கு மத்திய அரசு வட்டி தள்ளுபடி செய்ய வேண்டும் என்று தி.மு.க. தேர்தல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டு இருந்ததே? இதனை செய்தாரா திரு. கருணாநிதி? இல்லை.

அரிசிக்கான குறைந்தபட்ச ஆதார விலை கோதுமைக்கு இணையாக உயர்த்தப்பட வேண்டும் என்று 2009–ஆம் ஆண்டு தி.மு.க. தேர்தல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டு இருந்தது. இந்த வாக்குறுதியை திரு. கருணாநிதி நிறைவேற்றினாரா? இல்லை!

பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தில் அனைத்து விவசாயிகளும் கொண்டு வரப்படவும், அதற்கான காப்பீட்டுத் தொகையை மத்திய, மாநில அரசுகள் சரி பாதியாக செலுத்தவும், மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று 2009–ஆம் ஆண்டு தி.மு.க. தேர்தல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதே! இதன் மீது ஏதாவது நடவடிக்கை எடுத்தாரா திரு. கருணாநிதி? இல்லையே! மாறாக மத்திய அரசின் விவசாய விரோத காப்பீட்டுத் திட்டத்திற்கு ஆதரவு அளித்தார் திரு. கருணாநிதி.

விவசாயிகளுக்கான சமூகப் பாதுகாப்புத் திட்டம் மத்திய அரசால் செயல்படுத்தப்பட வேண்டும் என தி.மு.க. தேர்தல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டு இருந்ததே? இதை செயல்படுத்த என்ன நடவடிக்கை எடுத்தார் திரு. கருணாநிதி? எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

மத்தியிலும் மாநிலத்திலும் ஆட்சி அதிகாரத்தில் இருந்து கொண்டு, தன் குடும்பத்திற்கு மட்டுமே நன்மைகளை செய்து கொண்டவர் திரு. கருணாநிதி. உங்களுக்கு எந்த நன்மையையும் செய்யாதவர் திரு. கருணாநிதி. இப்படிப்பட்ட தி.மு.க–வை இந்தத் தேர்தலில் நீங்கள் வேரோடும், வேரடி மண்ணோடும் வீழ்த்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். செய்வீர்களா? நீங்கள் செய்வீர்களா? (செய்வோம் என பலத்த கரகோஷம்)

வேளாண் உற்பத்தியைப் பெருக்க எங்களால் என்னென்ன செய்ய முடியுமோ அவற்றை எல்லாம் செய்ய எனது தலைமையிலான அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

- ❖ உரங்கள், வேளாண் கருவிகள் ஆகியவற்றுக்கு முழு வரி விலக்கு அளித்த அரசு எனது தலைமையிலான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு.
- ❖ DAP உரங்கள் விவசாயிகளுக்கு எளிதாக கிடைக்கும் வகையில் டான்பெட் (TANFED) நிறுவனத்திற்கு கடந்த மூன்று ஆண்டுகளில் 340 கோடி ரூபாய் வட்டியில்லா கடன்

வழங்கிய அரசு எனது தலைமையிலான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு.

- ❖ வேளாண் துறைக்கு வரலாறு காணாத வகையில் அதிக நிதி ஒதுக்கிய அரசு எனது தலைமையிலான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு. முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் 2010–2011–ல் வேளாண் துறைக்கு செலவிடப்பட்ட தொகை 2,070 கோடி ரூபாய். எனது ஆட்சிக் காலத்தில் 2012–2013–ல் செலவிடப்பட்ட தொகை 4,321 கோடி ரூபாய்.
- ❖ நுண்ணீர் பாசனத்திற்காக சிறு குறு விவசாயிகளுக்கு 100 விழுக்காடு மானியத்தை வழங்கிய அரசு எனது தலைமையிலான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு.
- ❖ இதர விவசாயிகளுக்கு 75 விழுக்காடு மானியம் வழங்கிய அரசு எனது தலைமையிலான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு.
- ❖ வறட்சி நிவாரணமாக 20 லட்சத்து 90 ஆயிரம் விவசாயிகளுக்கு 1,328 கோடியே 50 லட்சம் ரூபாய் வழங்கிய அரசு எனது தலைமையிலான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு.
- ❖ 2011–2012 ஆம் ஆண்டு உணவு தானிய உற்பத்தியில் 101.51 லட்சம் மெட்ரிக் டன் என்ற சாதனையை எய்திய அரசு எனது தலைமையிலான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு.
- ❖ இந்த ஆண்டு உணவு தானிய உற்பத்தி இது வரை இல்லாத சாதனை அளவாக 103 லட்சம் மெட்ரிக் டன் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.
- ❖ விவசாயிகளுக்கான பொருளீட்டுக் கடனை ஒரு லட்சம் ரூபாயிலிருந்து 2 லட்சம் ரூபாயாக உயர்த்திய அரசு எனது தலைமையிலான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு.
- ❖ ஒழுங்குமுறை விற்பனை கூடங்களில் 88 நவீன கிடங்குகளை அமைத்து; 70 குளிர்பதன வசதி அமைப்புகளை ஏற்படுத்தித் தந்த அரசு எனது தலைமையிலான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு.
- ❖ ஒரு லட்சத்து 13 ஆயிரம் ஏக்கர் தரிசு நிலங்களை விளை நிலங்களாக மாற்றிய அரசு எனது தலைமையிலான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு.
- ❖ எல்லாவற்றிற்கும் மேலாக காவேரி நடுவர் மன்றத்தின் இறுதி ஆணையை மத்திய அரசிதழில் வெளியிடச் செய்த அரசு எனது தலைமையிலான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு.

மத்திய அரசின் கொள்கைகளை தீர்மானிக்கும் வலிமையை நீங்கள் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு வழங்கினால், இதை விட மிக அதிகமான சாதனைகளை நாங்கள் நிகழ்த்திக் காட்டுவோம்.

எனக்கு எல்லாமே நீங்கள் தான். உங்களால் தான் நான். உங்களுக்காகவே நான். எனக்கு தன்னலம் கிடையாது. எல்லாமே உங்கள் நலன் தான். தமிழ்நாட்டின் நலன் தான். தமிழக மக்களின் நலன் தான். தமிழக மக்கள் தான் என் மக்கள்.

எனவே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் அங்கம் வகிக்கும் மத்திய ஆட்சி அமைய நீங்கள் அனைவரும், இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். தந்த வெற்றிச் சின்னமாம் இரட்டை இலை சின்னத்தில் வாக்களிக்க வேண்டும் என்று அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை அனைத்துத் தொகுதிகளிலும் நீங்கள் மகத்தான வெற்றி பெறச் செய்ய வேண்டும் என்று உங்களை எல்லாம் அன்புடன் வேண்டி விரும்பி கேட்டுக் கொள்கிறேன்.

வருகின்ற மக்களவைத் தேர்தல் வெறும் ஆட்சி மாற்றத்திற்கான தேர்தல் அல்ல. இந்தியாவின் தலையெழுத்தை, உங்களின் தலைவிதியை, மாற்றி அமைக்கப் போகிற தேர்தல்.

மத்திய காங்கிரஸ் கூட்டணி ஆட்சியில் அனைத்துத் துறைகளிலும் ஊழல் கொடிகட்டி பறக்கிறது. 2ஜி ஸ்பெக்ட்ரம் இமாலய ஊழல், ஹெலிகாப்டர் ஊழல், நிலக்கரி ஊழல், காமன்வெல்த் விளையாட்டை நடத்தியதில் ஊழல், விமான என்ஜின் வாங்கியதில் ஊழல் என ஊழல் பட்டியல் நீண்டு கொண்டே போகிறது. இதில், 2ஜி ஸ்பெக்ட்ரம் இமாலய ஊழலை முன்னின்று நடத்தியது கட்சி தி.மு.க. என்பதை மறந்துவிடாதீர்கள். காங்கிரஸ் ஆட்சியில் நடைபெற்ற ஊழல்கள் மூலம் மட்டும் பல லட்சம் கோடி ரூபாய் அளவிற்கு மத்திய அரசுக்கு வருவாய் இழப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது என்பதை நீங்கள் நினைவில் கொள்ள வேண்டும்.

இப்படிப்பட்ட மக்கள் விரோத ஊழல் காங்கிரஸ் அரசை ஆட்சியிலிருந்து தூக்கி எறிவதை குறிக்கோளாகக் கொண்டு, நீங்கள் இந்தத் தேர்தலில் உங்கள் ஜனநாயகக் கடமையை ஆற்ற வேண்டும் என்று அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். அனைத்து தொகுதிகளிலும் நீங்கள் காங்கிரஸ் கட்சியை டெபாசிட் இழக்கச் செய்ய வேண்டும் என்று அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். செய்வீர்களா ? நீங்கள் செய்வீர்களா ? (செய்வோம் என பலத்த கரகோஷம்)

கிட்டத்தட்ட 17 ஆண்டு காலம் மத்திய அமைச்சரவையில் அங்கம் வகித்த கட்சி தி.மு.க. தமிழ் நாட்டிற்கு திமுக எதையாவது செய்ததா ? இல்லை. 'மக்கள் நலம்' 'மக்கள் நலம்' என்று சொல்லி உங்களின் வாக்குகளைப் பெற்றார் திரு. கருணாநிதி. ஆட்சியில் அமர்ந்ததும் உங்கள் நலத்தை மறந்துவிட்டார்.

இப்படிப்பட்ட திமுக கட்சிக்கு இந்தத் தேர்தலில் நீங்கள் தக்க பாடம் புகட்ட வேண்டும், திமுக–விற்கு சவுக்கடி கொடுத்து விரட்ட வேண்டும் என்று உங்களையெல்லாம் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். செய்வீர்களா ? நீங்கள் செய்வீர்களா ? (செய்வோம் என பலத்த கரகோஷம்)

தமிழகம் இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக விளங்க வேண்டும் என்றால், தமிழகத்திற்கு தேவையானவற்றை பெற வேண்டும் என்றால், அதற்கு ஒரே வழி மத்தியிலே ஆட்சி மாற்றம். அந்த ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தக் கூடிய வலிமையை நீங்கள் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு வழங்க வேண்டும். எனது கரங்களை வலுப்படுத்த வேண்டும் என்று அன்புடன் உங்களை கேட்டுக் கொள்கிறேன். செய்வீர்களா ? நீங்கள் செய்வீர்களா ? (செய்வோம் என பலத்த கரகோஷம்)

உங்களின் ஆதரவோடு உங்கள் ஆட்சி மத்தியிலே அமையப் பெறும் போது,

- ❖ இந்திய நாட்டை வளர்ச்சிப் பாதையில் அழைத்துச் செல்லும் வகையில் ஏற்றுமதியை ஊக்குவிக்கவும், இறக்குமதியை தேவைக்கேற்ப செய்யவும்;
- ❖ விலைவாசி உயர்வை கட்டுக்குள் கொண்டு வரவும்;
- ❖ காவேரி, முல்லைப் பெரியாறு போன்ற நதிநீர்ப் பிரச்சனைகளில் தமிழகத்தின் உரிமையை நிலைநாட்டவும்;
- ❖ தமிழக மீனவர்கள் பிரச்சனைக்கு முற்றுப்புள்ளி வைக்கவும்;
- ❖ இலங்கை போரின் போது இனப் படுகொலை செய்தவர்களை ஐக்கிய நாடுகள் சபை மூலம் சட்டத்தின் முன் நிறுத்தி, தண்டனை பெற்றுத் தருவதற்கான தீர்மானத்தை இந்தியாவே முன்மொழியவும்;
- ❖ வல்லரசு நாடுகளுக்கு இணையாக இந்திய ராணுவத்தை, தரைப்படையை, கப்பற் படையை, விமானப் படையை நவீனமயம் ஆக்கவும்;
- ❖ தமிழ் மொழியை ஆட்சி மொழியாக ஆக்கவும், சென்னை உயர் நீதிமன்றத்தின் வழக்காடு மொழியாக தமிழை ஆக்கவும்;
- ❖ சில்லரை வர்த்தகத்தில் அந்நிய முதலீடு அறவே ஒழியவும்;
- ❖ வெளிநாடுகளில் உள்ள கருப்புப் பணத்தை மீட்கவும்;
- ❖ 2ஜி ஸ்பெக்ட்ரம் இமாலய ஊழல், ஹெலிகாப்டர் ஊழல், நிலக்கரி ஊழல் போன்ற காங்கிரஸ் தலைமையிலான கூட்டணி ஆட்சியில் நடைபெற்ற ஊழல்களுக்கு

காரணமானவர்களுக்கு நீதிமன்றம் மூலம் தண்டனை பெற்றுத் தரவும், இந்த ஊழல்கள் மூலம் மத்திய அரசுக்கு ஏற்பட்ட வருவாய் இழப்பை ஈடு கட்டவும்;

- ❖ பெட்ரோல், டீசல் ஆகியவற்றின் விலை நிர்ணயக் கொள்கையை மாற்றி அமைக்கவும், பெட்ரோலியப் பொருட்களின் விலை ஓர் ஆண்டு முழுவதும் நிலையாக இருக்கவும்;
- ❖ தனி நபருக்கான வருமான வரி உச்ச வரம்பினை 5 லட்சம் ரூபாயாக உயர்த்தவும் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்திய நாடு சுதந்திரம் பெறுவதற்கு முன்பு வெள்ளையர்கள் விரட்டப்பட வேண்டும் என்ற மனநிலை மக்கள் மனங்களில் நிலவியது. தற்போது, இந்தியாவை வேட்டைக் காடாக்கி, கொள்ளையடித்து, சின்னாபின்னமாக்கி, நாட்டையே சூறையாடிய, காங்கிரஸ் தலைமையிலான மத்திய அரசை தூக்கி எறிய வேண்டும், இனி எதிர்காலத்திலும் மத்தியிலே காங்கிரசை ஆட்சி அமைக்க விடக் கூடாது என்ற மன நிலையில் தான் நீங்கள் எல்லாம் இருக்கிறீர்கள். இந்தியா முழுவதும் இந்த நிலை தான் இன்று உள்ளது. இந்திய விடுதலைக்கு முன் மக்கள் மனதில் இருந்த அதே மன நிலை இந்தியா சுதந்திரம் அடைந்து 66 ஆண்டுகள் கழித்து, தற்போது மக்கள் மனங்களில் மீண்டும் உருவாகியுள்ளது.

நடைபெற இருக்கின்ற மக்களவைத் தேர்தல் மக்கள் விரோத ஆட்சியை, முடிவுக்கு கொண்டு வரும் தேர்தல் மட்டுமல்ல, மக்களாட்சியை நிலைநாட்டும் தேர்தல். இந்தத் தேர்தலின் மூலம் இந்திய நாட்டிலே நடைபெற்றுக் கொண்டிருக்கிற குடும்ப ஆட்சிக்கு, ஊழல் ஆட்சிக்கு நீங்கள் முற்றுப் புள்ளி வைக்க வேண்டும், அதன் மூலம் மக்களாட்சி மலர வேண்டும். இதை உங்களால் தான் சாதிக்க முடியும். செய்வீர்களா ? நீங்கள் செய்வீர்களா ? (செய்வோம் என பலத்த கரகோஷம்)

மத்தியிலே மக்களாட்சி மலர்ந்தால் மட்டும் போதாது. அந்த ஆட்சி தமிழகத்தின் ஆட்சியாக, நமது ஆட்சியாக, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் அங்கம் வகிக்கும் ஆட்சியாக அமைய வேண்டும். அப்பொழுது தான், தமிழர்களின் உரிமைகள் நிலைநாட்டப்படும். தமிழர்களின் கோரிக்கைகள் நிறைவேற்றப்படும்.

தமிழர்களின் நலன்கள் பாதுகாக்கப்படும். தமிழ்நாட்டு மக்களின் வாழ்வு வளம் பெறும். இதன் அடிப்படையில் நீங்கள் எல்லாம் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளர்களுக்கு இரட்டை இலை சின்னத்தில் வாக்களிக்க வேண்டும் என்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

வாக்காளப் பெருமக்களே! இப்பொழுது நான் சொல்வதை நீங்கள் கவனமாகக் கேட்க வேண்டும். இதனை உங்கள் மனதில் இறுத்திக்கொள்ள வேண்டும். உங்கள் வாக்கு என்பது உங்கள் உரிமை. உங்கள் வாக்கு என்பது இந்த நாட்டின் சொத்து. உங்கள் வாக்குதான் நாளை இந்தியாவின் தலைவிதியையே மாற்றி அமைக்கப் போகிறது. அத்தகைய சக்தி படைத்தது உங்கள் வாக்கு. அந்த வாக்கை வீணாக்கிவிடாதீர்கள்.

இன்று நாடாளுமன்றத் தேர்தலில் பல கட்சிகள் களம் இறங்கியுள்ளன. இந்த கட்சிகள் எல்லாம் உங்களிடம் வந்து வாக்கு கேட்கின்றன. வேறு கட்சிக்கு நீங்கள் வாக்களித்துவிட்டால், அதனால் யாருக்கும் எந்தப் பயனும் இருக்கப் போவதில்லை. வேறு கட்சிகளுக்கு நீங்கள் வாக்களித்தால் அந்தக் கட்சிகளும் வெற்றிபெறப் போவதில்லை. வாக்குகள் சிதறிவிடும் அவ்வளவு தான். உங்கள் வாக்கு வீணாகிவிடும். எனவே, அன்புகூர்ந்து உங்கள் வாக்குகளை வீணாக்கிவிடாதீர்கள். மாறாக, வாக்காளப் பெருமக்களாகிய நீங்கள் அனைவரும் அனைத்து தொகுதிகளிலும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளர்களுக்கு இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். தந்த வெற்றிச் சின்னமாம் இரட்டை இலை சின்னத்தில் வாக்களித்து, மகத்தான வெற்றிபெறச் செய்தால் மத்தியிலே இந்தியாவை வல்லரசாக்கக் கூடிய வலிமையான ஆட்சி அமையும். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் அங்கம் வகிக்கும் மத்திய ஆட்சி அமைந்தால், நாட்டு மக்களுக்கும், உங்களுக்கும் எண்ணற்ற நன்மைகள் வந்து குவியும். பாரதம் ஒளிரும். தமிழ் நாடு மிளிரும். எனவே, மறவாமல், தவறாமல் நீங்கள் அனைவரும் இரட்டை இலை சின்னத்தில் வாக்களிக்க வேண்டும் என்று அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

'அமைதி, வளம், வளர்ச்சி' என்ற பாதையில் இந்தியாவை வழி நடத்திச் செல்ல அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு நீங்கள் ஒரு நல்வாய்ப்பினை நல்குவீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு முழுமையாக உண்டு.

''வளமான வல்லரசு வலிமையான நல்லரசு'' என்ற நிலையை பாரதம் எய்திட, ''தரணி போற்றும் தன்னிகரில்லா மாநிலம்'' என்ற பெருமையை தமிழகம் அடைந்திட, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளர்களுக்கு புரட்சித் தலைவர் MGR கண்ட வெற்றிச் சின்னமாம் இரட்டை இலை சின்னத்தில் வாக்களித்து, அவர்கள் அனைவரையும் மகத்தான வெற்றி பெறச் செய்ய வேண்டும் என்று உங்களை அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

மக்கள் தாங்களாகவே தங்கள் சொந்தச் செலவில் வாகனங்களில் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்திற்கு வரும் செலவு வேட்பாளர் கணக்கில் சேர்க்கப்படும் என்று இந்திய தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளதால், இந்தப் பொதுக் கூட்டத்தில் எனது கட்சியின் வேட்பாளர் கலந்து கொள்ள முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

வாக்காளப் பெருமக்களே! மறவாதீர்! வருகின்ற 24.4.2014 அன்று நடைபெற உள்ள நாடாளுமன்ற நாடாளுமன்ற மக்களவைப் பொதுத் தேர்தலில், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்கள் அனைவரையும், இதய தெய்வம் புரட்சித் தலைவர் MGR தந்த வெற்றிச் சின்னமாம் ''இரட்டை இலை'' சின்னத்தில் வாக்களித்து அவர்கள் அனைவரையும் மகத்தான வெற்றி பெறச் செய்ய வேண்டும் என்று உங்களையெல்லாம் அன்புடன் வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்கள் உங்களுடனேயே இருப்பார்கள், உங்களையே சுற்றிச் சுற்றி வருவார்கள். உங்கள் தேவைகள் என்ன என்பதைக் கேட்டறிந்து அவற்றை நிறைவேற்றித் தரப் பாடுபடுவார்கள் என்ற உத்தரவாதத்தை உங்களுக்கு நான் அளிக்கிறேன்.

மறவாதீர்! உங்கள் சின்னம் ''இரட்டை இலை'' உங்கள் வாக்கை தமிழகத்தின் நலனுக்காகவும், தமிழர்களின் நலனுக்காகவும் பயன்படுத்துங்கள். இந்தியத் திருநாட்டை காப்பாற்றுங்கள் என்று உங்களையெல்லாம் அன்புடன் கேட்டுக் கொண்டு ''அச்சம் என்பது மடமையடா, அஞ்சாமை திராவிடர் உடமையடா, ஆறிலும் சாவு நூறிலும் சாவு தாயகம் காப்பது கடமையடா'' என்ற புரட்சித் தலைவர் MGR-ன் பாடல் வரிகளை நினைவுபடுத்தி அண்ணா நாமம் வாழ்க! புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். நாமம் வாழ்க! என்று கூறி விடை பெறுகிறேன். நன்றி வணக்கம்.

** ** ** **